**செய்தி வெளியீடு எண்: 46** **நாள்: 22.01.2013**

<u>செய்தி வெளியீடு</u>

மக்களுக்கான திட்டங்களையும், வளர்ச்சிப் பணிகளையும் வலுவான நிதி ஆதாரங்கள் மூலம் தான் செயல்படுத்த முடியும். மாநில அரசின் வரிவசூல் மூலம் ஈட்டுகின்ற நிதி ஆதாரத்தைக் கொண்டு பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மாநிலத்தின் மொத்த வருவாயில் மூன்றில் இரண்டு பங்கினை ஈட்டித்தருவது வணிகவரித்துறையாகும். இதன் மூலம் மாநிலத்தின் வளர்ச்சிக்கும் மற்றும் மக்கள் நலத் திட்டங்களுக்கும் தேவையான நிதி ஆதாரங்களை திரட்டுவதில் இத்துறை முக்கியமான பங்கு வகிக்கிறது.

வணிகவரித்துறையின் பணிகளை எளிதாக்கும் விதத்தில் கடந்த ஆண்டு, இத்துறையின் அனைத்து அலுவல்களையும் 231 கோடி ரூபாய் செலவில் கணினிமயமாக்க ஏற்கெனவே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் உத்தரவிடப்பட்டது.

அரசுக்கு வருவாய் ஈட்டித்தரும் வணிகவரித்துறை அலுவலகங்கள் பல வாடகைக் கட்டடங்களிலேயே இயங்கி வருகின்றன. இவ்வலுவலகங்கள் இயங்கும் வாடகைக் கட்டடங்களின் அமைப்பு இவ்வலுவலகத்தின் பணிகளுக்கு ஏற்ற வகையில் அமையாததனால், அவ்வலுவலகங்களுக்கு வருகை தரும் வணிகர்களும் மற்றும் அங்கு பணிபுரியும் பணியாளர்களும் பல சமயங்களில் மிகுந்த சிரமத்திற்குள்ளாகின்றனர். மேலும், அங்கு பணியாற்றும் பணியாளர்கள் தங்கள் பணிகளை ஆற்றுவதற்கும், ஆவணங்களை பாதுகாப்பதற்கும் போதிய இடவசதியின்றி சிரமத்திற்கு உள்ளாகின்றனர். மேலும், இக்கட்டடங்களுக்காக வாடகையாக பெரியதொரு தொகையை ஆண்டுதோறும் அரசு செலவு செய்கின்றது.

இச்சிரமங்களைக் குறைப்பதற்காக, 2011-2012 ஆம் ஆண்டில் திருவண்ணாமலை, மயிலாடுதுறை, லால்குடி, புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, நன்னிலம், ஸ்ரீரங்கம், சிவகங்கை, திண்டுக்கல், ஈரோடு, வால்பாறை, கோயம்புத்தூர், மேட்டுப்பாளையம், கோவில்பட்டி மற்றும் பண்ருட்டி ஆகிய 15 இடங்களில் உள்ள 34 அலுவலகங்களுக்கு 20 கோடியே 15 லட்சம் ரூபாய் செலவில் சொந்தக் கட்டடங்கள் கட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஏற்கெனவே ஆணையிட்டார்கள்.

நடப்பு ஆண்டில் ராணிப்பேட்டை, விருத்தாச்சலம், கள்ளக்குறிச்சி, செஞ்சி, அரூர், அரியலூர், திருப்பூர், அம்பாசமுத்திரம், நாங்குநேரி மற்றும் திருச்செந்தூர் ஆகிய 10 இடங்களில் உள்ள 16 வணிகவரி அலுவலகங்களுக்கு ரூ.11.18 கோடி செலவில், சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இந்தக் கட்டடங்கள் வணிகவரி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அமர்ந்து பணிபுரிவதற்கும், வணிகர்கள் வந்து செல்வதற்கும் போதுமான இடவசதி, மாநாட்டுக் கூடம், மாற்றுத் திறனாளிகளுக்கான சாய்தளம், கைப்பிடிமான வசதி, சுகாதார வசதி, கணினி அறை, பதிவறை, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, Inverter மற்றும் தீ விபத்து தடுப்பு உபகரணங்கள் போன்ற நவீன வசதிகளுடன் அமையப் பெறும்.

அரசின் இந்த நடவடிக்கைகள் மூலம் வணிகவரித்துறையின் செயல்பாடுகள் மேன்மை அடையும்.

*******

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள்:- 22.1.2013.